இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 223 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 11 – ஞாயிற்றுக்கிழமை 24 மார்ச் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 223 : Thiruvalluvar Year - 2055 - Panguni 11 - Sunday 24 March 2024 - Dak 12 Pages ₹ 5.00


## இந்தியாவைக் காக்கும் வெற்றிப் பயணத்தை திருச்சியிலிருந்து தொடங்குகிறேன்!

# திருச்சிப் பாதை எப்போதும் நம் வெற்றிப் பாதை!

## நாடாளுமன்றத் தேர்தலில் பிரச்சாரத்தைத் தொடங்கி தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி முழக்கம்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.3.2024) திருச்சிராப்பள்ளி, சிறுகனூரில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார முதல் பொதுக் கூட்டத்தில், திருச்சி தொகுதி வேட்பாளர் ம.தி.மு.க. தலைமைக் கழக செயலாளர் துரை வையாபுரி அவர்களையும், பெரம்பலூர் தொகுதி வேட்பாளர் அருண் நேரு அவர்களையும் அறிமுகப்படுத்தி, பிரச்சாரத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

**திருச்சி, மார்ச் 24 –**

**திருச்சியில் பிரம்மாண்டமாக நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றிய தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பா.ஜ.க.வில் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் சொல்கிறேன் உங்களுடைய ஆணவம்தான் பா.ஜ.க.வை வீழ்த்தப் போகிறது! இந்தியாவைக் காக்கும் வெற்றிப் பயணத்தை திருச்சியில் இருந்து தொடங்குகிறேன்! திருச்சிப் பாதை எப்போதும் – வெற்றிப் பாதை என உறுதிபடக் கூறினார்.**

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (22.03.2024) திருச்சியில் நடைபெற்ற 'திருச்சி, பெரம்பலூர்' மக்களவைத் தொகுதிகளுக்கான தேர்தல் பரப்புரையில் கலந்து கொண்டு ஆற்றிய எழுச்சியுரையின் விவரம் வருமாறு:–

டெல்லி செங்கோட்டையை யார் கைப்பற்ற வேண்டும் என்று தீர்மானிக்க இந்த மலைக் கோட்டை மாநகரில் கடல்போல் திரண்டிருக்கும் தமிழ்ச் சொந்தங்களே! திருச்சி என்றாலே திருப்புமுனை! இப்போது இந்தியாவுக்கே திருப்புமுனை ஏற்படுத்த நாம் திரண்டிருக்கிறோம்! பல திருப்புமுனைகளை தமிழ்நாட்டுக்கு கொடுத்து, தமிழினத்தின் முன்னேற்றத்துக்காக

> **நேரு அவர்கள் சொன்னதுபோல், கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, 'தமிழ்நாட்டின் விடியலுக்கான முழக்கம்' என்ற எழுச்சிமிகு கூட்டத்தை ஏற்பாடு செய்து, இங்கு அழைத்து வந்தார் ஆருயிர்ச் சகோதரர் கே.என். நேரு. அதுதான் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியை வீழ்த்தி கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை அமர வைத்தது! உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டேன். அன்று முதல், இந்தியாவே பாராட்டும் நல்லாட்சியை நடத்தி வருகிறேன்.**

தன்னுடைய வாழ்நாளெல்லாம் உழைத்த தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டுப் பரிசாக, ஒரு மகத்தான வெற்றியை கொடுப்பதற்கான துவக்கமாக இங்கு திரண்டிருக்கிறோம்!

### நாற்பதுக்கு நாற்பது வெற்றி நாம் எழுதப்போகும் புதிய வரலாறு!

வெற்றி என்றால் எப்படிப்பட்ட வெற்றி? நாற்பதுக்கு, நாற்பது! நாற்பதுக்கு, நாற்பது! நாம் எழுதப் போகும் புதிய வரலாற்றுக்கு முன், தந்தை பெரியாரையும் பேரறிஞர் அண்ணாவையும் தலைவர் கலைஞரையும் வணங்கி, இந்தப் பயணத்தைத் தொடங்குகிறேன். மாநாடு போல இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறார் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள்.

எல்லாவற்றுக்கும் தொடக்கமாக இருப்பது இந்தத் திருச்சிதான்! திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நிற்க வேண்டும் என்று 1956 ஆம் ஆண்டு முடிவெடுக்கப்பட்டது திருச்சி மாநாட்டில்தான்! திருச்சி பாதை எப்போதுமே வெற்றிப் பாதை! அதன் அடையாளமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆறு முறை ஆட்சிப் பொறுப்பை வழங்கியிருக்கிறார்கள் தமிழ்நாட்டு மக்கள்!

நேரு அவர்கள் சொன்னதுபோல், கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, 'தமிழ்நாட்டின் விடியலுக்கான முழக்கம்' என்ற எழுச்சிமிகு கூட்டத்தை ஏற்பாடு செய்து, இங்கு அழைத்து வந்தார் ஆருயிர்ச் சகோதரர் கே.என்.நேரு. அதுதான் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியை வீழ்த்தி கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை அமர வைத்தது! உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டேன். அன்று முதல், இந்தியாவே பாராட்டும் நல்லாட்சியை நடத்தி வருகிறேன்.

### இந்தியா கூட்டணி ஆட்சியை ஒன்றியத்தில் ஏற்படுத்துவோம்!

பாசிச பா.ஜ.க.வை வீழ்த்தி, இந்தியா கூட்டணியின் ஆட்சியை ஒன்றியத்தில் ஏற்படுத்துவதற்காக நடப்பதுதான், இந்த நாடாளுமன்றத் தேர்தல்!

தேர்தல் என்பதால் பிரதமர், இப்போது இந்தியாவில் இருக்கிறார்; அதனால் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வருகிறார். இல்லை என்றால், பெரும்பாலும் வெளிநாட்டில்தான் இருப்பார். சமீபத்தில் சேலத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி அவர்கள், "தமிழ்நாட்டில் அவருக்கு செல்வாக்கு அதிகமாகிவிட்டதால், தி.மு.க. வினருக்குத் தூக்கம் வரவில்லை என்று பேசியிருக்கிறார். உண்மையில், தன்னோட ஆட்சி முடியபோகிறது என்று, பிரதமர் மோடிக்குத் தான் தூக்கம் வரவில்லை! அவருக்கு ஏற்பட்டிருக்கும் தோல்வி பயம், அவரின் முகத்திலும் – கண்ணிலும் நன்றாகத் தெரிகிறது!

சரி, தமிழ்நாட்டுக்கு இத்தனை முறை வந்தாரே, அவரிடம் நான் ஒரே ஒரு கேள்விதான் கேட்டேன். அதுக்கு ஒருமுறையாவது பதில் சொன்னாரா? வாரா வாரம் வந்தாலும் அவர் பதில் சொல்லவில்லை! இனி வந்தாலும், சொல்லவும் முடியாது! பத்தாண்டு காலம் ஆட்சி செய்த ஒரு பிரதமரால், தமிழ்நாட்டுக்குச் செய்த சிறப்புத் திட்டம் என்று ஒன்றே ஒன்றைக்கூட சொல்ல முடியுமா? இவர் நம்மை விமர்சிக்கிறார்!

இப்போது நான் சொல்கிறேன், நம்முடைய

தொடர்ச்சி 3- ஆம் பக்கம்

---

சி.பி.ஐ. உள்ளிட்ட விசாரணை அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்தும்

## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்துப் போராட்டம்!

### டெல்லியில் மார்ச் 31 – அன்று 'இந்தியா' கூட்டணி சார்பில் நடைபெறுகிறது!

புதுடெல்லி, மார்ச் 24 –

சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தவறாகப் பயன்படுத்தும் பா.ஜ.க.வைக் கண்டித்து மார்ச் 31 ஆம் தேதி 'இந்தியா' கூட்டணி சார்பில் டெல்லியில் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் வகையில் அமலாக்கத்துறை, சி.பி.ஐ. உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை பயன்படுத்தி வருகிறது.

ஜார்க்கண்ட் முதலமைச்சராக இருந்த ஹேமந்த் சோரன் கடந்த மாதம் அமலாக்கத்துறை கைது செய்தது.

இந்நிலையில், டெல்லி மதுபானக் கொள்கை வழக்கு தொடர்பாக, டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெஜ்ரிவாலின் இந்த கைது நடவடிக்கைக்கு 'இந்தியா' கூட்டணி கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தவறாகப் பயன்படுத்தும் பா.ஜ.க.வைக் கண்டித்து மார்ச் 31 ஆம் தேதி 'இந்தியா' கூட்டணி சார்பில் டெல்லியில் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளைய பிரச்சாரம்!



2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் நாளைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
| --- | --- |
| **25.03.2024 (திங்கட்கிழமை) -** | **கன்னியாகுமரி, திருநெல்வேலி** |